தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 12.05.2026

## முன்னிலை
## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 13175/F/2024**

திரு.மா.ஆனந்தகுமார், -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மேற்பார்வையாளர்,
மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
திருப்பூர் மாவட்டம்-641 601.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (12.05.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.மா.ஆனந்தகுமார், அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகவில்லை. மேலும் மனுதாரர் 27.04.2026 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தனக்கு வேறொரு தேதி வழங்குமாறு ஆணையத்திடம் கோரியுள்ளார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.கோ.கண்ணன், கட்டிடகலை/ திட்ட உதவியாளர், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், 6-ம் தளம், அறை எண்கள்.644, 645, 646, மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம், திருப்பூர் மாவட்டம்-641 604 அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 02.07.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், “திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளில் நகர் ஊரமைப்பு சட்டம் 1971-ன் பிரிவு 56 (ம) 57-ன் கீழ் நடவடிக்கை எடுக்க கோரி மனு நாள் 13.05.2024-ஐ பதிவு செய்துள்ள விவரங்களை உள்ளது உள்ளபடி நகலிட்டு சான்றொப்பமிட்டு வழங்குமாறு வேண்டுகிறேன்” என்பன போன்ற தகவல்கள 12 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், திட்ட உதவியாளர், நகர்

ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்-641 601 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர், திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், குமரன் வணிக வளாகம், திருப்பூர் மாவட்டம்-1 அவர்கள் ந.க.எண்.1721/2024/சுஎத, நாள் 28.07.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் வழங்கியுள்ளார். மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து முழுமையான தகவல்கள் வழங்காத காரணத்தால் 14.08.2024 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னர் மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் தகவல்கள் கிடைக்கப்பெறாத காரணத்தால், 10.10.2024 தேதியிட்டு பிரிவு 19(3)-இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 12.05.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து ந.க.எண்.1721/2024/சுஎத, நாள் 28.07.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும், முதல் மேல்முறையீட்டு அலுவலரால் 19.12.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும் மனுதாரருக்கு தகவல்கள் இனம் வாரியாக தகவல்கள் ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதன் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு தகவல்கள் பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் பதிவு செய்கிறது. இருப்பினும் மனுதாரர் வழக்கு விசாரணையை வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கக் கோரியதை ஆணையம் பரிசீலனை செய்து, இவ்வழக்கின் மீதான விசாரணையை பிறிதொரு தேதிக்கு ஆணையம் ஒத்திவைக்கிறது. அடுத்த விசாரணை தேதி பின்னர் தெரிவிக்கப்படும்.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 13175/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மேற்பார்வையாளர்,
மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்-641 601.

**<u>மனுதாரர்</u>**

திரு.மா.ஆனந்தகுமார்,
எண்.4-425டி ஆண்டிபாளையம்,
தொங்குட்டிபாளையம் கிராமம்,
ஊராட்சி மற்றும் அஞ்சல்,
பொல்லிக்காளிபாளையம் வழி,
தெற்கு தாலுகா,
திருப்பூர் மாவட்டம்-641 665.

Copy to: File NS/PA-

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005